Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2022 கார்த்திகை 26 வியாழக்கிழமை [12-12-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 16

# தெற்கிலிருந்து தூதுக்குழு நாளை யாழ். வருகிறது

## தமிழர்களின் உணர்வுகளை அறியும் நோக்குடன் நல்லெண்ண விஜயம்

யாழ்ப்பாணம், டிசம்பர் 12

தென்னிலங்கையில் இருந்து நல்லெண்ண விஜயம் மேற்கொண்டு விசேட தூதுக்குழு ஒன்று நாளை வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வருகிறது.

வடபகுதி மக்களின் கஷ்டங்கள், துன்ப துயரங்களை நேரில் கண்டறிவதோடு, தமிழர்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்வதே தூதுக் குழுவினரின் பிரதான நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த வருடம் ஜூன் மாதத்தில் யுத்தம் ஆரம்பித்த பின்னர் தென்னிலங்கையில் இருந்து யாழ்ப்பாணம் வரும் முதலாவது நல்லெண்ணத் தூதுக்குழு இதுவாகும். பிரபல தூதுக் குழுவுக்கு இலங்கை மெதடிஸ்த சபையின் முன்னாள் தலைவர் வண. பிதா சோமா பெரேரா தலைமை வகிக்கிறார். தூதுக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலையில் திடீர் தாக்கு; 4 விமானப் படையினர் பலி!

## ஆயுத தளபாடங்களும் கைப்பற்றப்பட்டன

யாழ்ப்பாணம், டிச. 12

திருகோணமலை மாவட்டம், பெரிய விளாங்குளம் [மொறவெவ] விமானப் படை முகாமைச் சேர்ந்த படையினர் நேற்று முன்தினம் காலை 7-45 மணியளவில் ரோந்து சென்ற சமயம், அவர்கள் மீது விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர். இந்தத் தாக்குதலில் நான்கு படையினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். அவர்களிடம் இருந்த ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

15 க்கும் மேற்பட்ட படையினர் இங்குரா இங்கள கிராமத்துக்கு பாதுகாப்பு வழங்க சென்ற சமயமே, அவர்கள் மீது புலிகளின் தாக்குதல் அணி திடீர் தாக்குதலை நடத்தியது.

கொல்லப்பட்ட படையினரின் சடலங்களையும், காயமடைந்தவர்களையும் தூக்கிக்கொண்டு ஏனையோர் மொறவெவ முகாமுக்கு தப்பி ஓடினர் என்று தெரிவிக்கப்பட்டது.

மொறவெவ பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் 4 படையினர் கொல்லப்பட்டுள்ளனர் என்று கொழும்பில் இராணுவ அதிகாரிகளும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பிரதான மருந்துகள் தட்டுப்பாடு; யாழ். ஆஸ்பத்திரியில் அவச்சாவுகள்!

யாழ்ப்பாணம், டிச. 12

யாழ்ப்பாணம் போதனா ஆஸ்பத்திரியில் உயிராபத்தான கொடும் நோய்களைத் தடுக்கப் பயன்படும் பிரதான மருந்து வகைகளுக்குக் கடும் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

அதனால் அவச்சாவுகள் அதிகரிக்கின்றன. அடிக்கடி சம்பவிக்கின்றன.

உதாரணமாக வயிற்றோட்டம், நிமோனியா, மூளைக் காய்ச்சல் ஆகிய நோய்களின் உச்சக்கட்டமான — இறுதிக் கட்டமான — "செப்டிசேமியா" (Septicaemia) வுக்குப் பாவிக்கப்படும் மருந்துவகைகளுக்கு யாழ். ஆஸ்பத்திரியில் மிகப்பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

கொழும்பிலிருந்து மிக அரிதாகவே இங்கு வந்து சேரும் இம் மருந்துகள் விரைவில் முடிந்து விடுகின்றன. செபாமைசின் (Cefamaizine), செவுறோக்ஸிம் (Cefuroxime) ஆகிய வகை மருந்துகள் ஆஸ்பத்திரியில் கிடைப்பதில்லை.

இம்மருந்துகள் வெளியில் மருந்தகங்களிலும் கிடைப்பதில்லை. இவை "அன்டிபயற்றிக்ஸ்" வகுப்பைச் சேர்ந்தவை என்பதால் வடபகுதிக்குக் கொண்டுவரத் தடை

(3 ஆம் பக்கம் பார்க்க)

# நாட்டை காக்க வீட்டுக்கு ஒருவர் போராடப் புறப்பட்டு வாருங்கள்!

## யாழ். விசேட தளபதி அழைப்பு

யாழ்ப்பாணம், டிச. 12

ஸ்ரீலங்கா ஜனாதிபதியில் இருந்து அனைத்து ஸ்ரீலங்கா இனவாதிகளும் எமது இனத்திற்கு எதிரான இராணுவத் தீர்வே ஒரே வழி என்று கூறி அதன்படி செயற்பட்டு வருகின்றனர். இது தனியே எம் மோடான போர்ப் பிரகடனம் மட்டுமல்ல ஒவ்வொரு தமிழனும் தனது மண்ணை, தனது மக்களை பாதுகாக்க வேண்டும் என்பதற்கான இறுதி எச்சரிக்கையுமாகும்.

இதனை உணர்ந்து — எமது தாயகத்தை — நாட்டைக் காக்க வீட்டுக்கொருவர் போராடப் புறப்பட வேண்டும்.

— இவ்வாறு, அழைப்பு விடுத்திருக்கிறார் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட விசேட தளபதி திரு. ப. தமிழ்ச்செல்வன். அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

தமிழீழ மக்களே!

இது சிந்தித்துக் கொண்டிருக்கின்ற காலமல்ல; இது

(3 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



இருக்கிறது பள்ளிக்கூடம்...!
தேடுகிறது வாத்திமாரை...!!
உதென்ன புதுப் புருடா......?

### கோர்பச்சேவ் ராஜினாமா?

சோவியத் ஜனாதிபதி மிகெய்ல் கோர்பச்சேவ் தமது பதவியை இராஜினாமாச் செய்யும் கட்டத்தில் இருப்பதாக மாஸ்கோ வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையில்—

சோவியத் பிளவுபட்டிருப்பதை உறுதி செய்யும் வகையில் ரஷ்யா, உக்ரைன் மற்றும் பைலோரஷ்யா ஆகியன புதிதாக நிறுவியிருக்கும் கொமன்வெல்த் அமைப்பில் சேர்ந்து கொள்ள ஆர்மேனியா, கிர்கிஸ்தான், கஸ்தோனியா, விற்துவேனியா ஆகிய குடியரசுகள் விருப்பம் தெரிவித்துள்ளன. (உ-5)

### பயணிகள் மீது படையினர் சூடு

மட்டக்களப்பு மாவட்டம் அம்பிலாந்துறையில் இருந்து அக்கரைக்குச் செல்ல காத்திருந்த பயணிகள் மற்றும் மீனவர்கள் மீது கடந்த ஞாயிறன்று படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதனால் தோணிகளில் ஏறி நகருக்குப் பரீட்சை எழுதச் சென்ற மாணவிகளும் சிதறி ஓடினர். கரையில் நின்ற தோணிகளையும் படையினர் ஆற்றில் தள்ளிவிட்டனர், அவை ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

### பொலீஸ்காரர் உயிரிழப்பு

திருகோணமலை மாவட்டம், புல்மோட்டைப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை விடுதலைப் புலிகள் நடத்திய புதிய முறைத் தாக்குதல் ஒன்றில், பொலீஸ்காரர் ஒருவர் கொல்லப்பட்டார்.

மிதிவெடியுடன் சேர்த்து இணைக்கப்பட்ட புதிய முறைத் தாக்குதல் மூலம் இது [illegible] (ஒ-5)

# சோவியத்தில் அதிகாரப் போட்டி!

## கோர்பி, யெல்ட்சின் இழுபறி

மாஸ்கோ, டிச. 12

ரஷ்யா, உக்ரைன் மற்றும் பைலோ ரஷ்ய மாநிலக் குடியரசுகள் அமைத்துள்ள கொமன்வெல்த் அமைப்புக்கு சோவியத் இராணுவத்தின் ஆதரவைப் பெறுவதில் ரஷ்ய மாநில ஜனாதிபதி பொரிஸ் யெல்ட்சின் ஈடுபட்டிருக்கிறார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. யெல்ட்சின் சோவியத் இராணுவ உயர் அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தினார்.

(3 ஆம் பக்கம் பார்க்க)

# அணு ஆயுதப் போருக்கு சோவியத் வழிவகுக்கும்?

வாஷிங்டன், டிச. 12

சோவியத்தில் அபாயகரமான — நிலையற்ற — தன்மை தோன்றியுள்ளது என்றும்—

இதனால் சோவியத்தில் உள்நாட்டுக் குழப்பம் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்றும் அமெரிக்க உளவுப் பிரிவான சி. ஐ. ஏ. எச்சரித்திருக்கிறது.

சோவியத்தின் பல்வேறு மாநிலங்களிலும் சுமார் 27 ஆயிரம் அணு ஆயுதங்கள் உள்ளன என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது.

சோவியத் பல துண்டுகளாகப் பிரியும் போது இந்த ஆயுதங்கள் பல்வேறு அரசுகளின் கட்டுப்பாட்டின் கீழ் வரும் என்றும்—

சோவியத் பிரதேசம் அணு

(3ஆம் பக்கம் பார்க்க)

# மட்டு. தமிழ் கிராமங்களில் 75 வீடுகள் தீக்கிரையாகின!

## உடைமைகள் முழுவதும் கொள்ளை

மட்டக்களப்பு மாவட்டத்தில் சேனைப் பயிர் செய்து வாழும் வறிய மக்கள் வாழும் தமிழ்க் கிராமங்களில் ஸ்ரீலங்காப் படையினர் புகுந்து, அப்பகுதிகளிலுள்ள 75 க்கும் மேற்பட்ட வீடுகளைக் கொள்ளையிட்டு, அவற்றை தீயிட்டுக் கொளுத்தினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பன்சேனை, நெடுங்கேணி, அடைச்சகல்குளம், ஓதியங்குடா, சமந்திராது ஆகிய கிராமங்களிலேயே கடந்த சனிக்கிழமை 19ஆம் திகதி இராணுவத்தினர் இந்த அடாவடித்தனத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தற்பொழுது பன்சேனை பாடசாலையில் தஞ்சம் புகுந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதே சமயம், காரை போரதீவுக் கிராமத்திலும் கடந்த மாதம் 23 ஆம் திகதி 60 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. (ஒ-5)

# காங்கேசனில் இறக்கிய உணவு தீவுப் பகுதிக்கு!

யாழ்ப்பாணம், டிச. 12

சமீபத்தில் காங்கேசன் துறைமுகத்தில் இறக்கப்பட்டு களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருள்களில் சுமார் 800 மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் படையினரால் தீவுப் பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளனவாம்.

களஞ்சியத்தில் போதியளவு உணவுப் பொருள்கள் சேர்ந்ததும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பாதுகாப்புடன், வாகன அணி அங்கு சென்று அவற்றை யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரும் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் எந்த ஓர் இணக்கமான சூழ்நிலையையும் ஏற்படுத்தாத படையினர் ஒரு பகுதி உணவுப் பொருள்களைத் தற்போது தீவுப்பகுதிகளுக்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

அதே சமயம் பருத்தித்துறை துறைமுகத்துக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களுடன் வரும் கப்பல்களின் வருகையும் இப்போது குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# தீவுப்பகுதிக்கு ஆசிரியர்கள்; படையினர் தேடுகின்றனர்!

தீவகப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளுக்கு ஆசிரியர்களைத் தேடும் முயற்சியில் படையினர் ஈடுபட்டுள்ளனராம்.

அப்பகுதிகளில் இக்கியுள்ள மாணவர்களுக்குக் கல்வி போதிப்பதற்கு அங்குள்ளவர்களில் இருந்து சிலரை தெரிவு செய்யவும் படையினர் "அரிசனை" எடுத்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தீவுப் பகுதிகளில் கடமையாற்றிய ஆசிரியர்களின் வெற்றிடங்களுக்கே புதியவர்களை நியமனம் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும்—

அதற்கென ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்கள், தங்களிடம் இக்கியுள்ளனரா என்று படையினர் தேடித் திரிகின்றனர் என்றும் அறியவருகிறது. (ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### துர்க்கா திருமண சேவை

சகல தொழில்களிலும், மணமகன்கள் உண்டு. எல்லா மதங்களிலும் திருமணத் தொடர்பு செய்து கொடுக்கப்படும்; ஜாதகம், புகைப்படத்துடன் எல்லா நாட்களிலும் தொடர்பு கொள்ளலாம்; அவுஸ்திரேலியாவில் வேலை செய்யும் செவ்வாய் குற்றமற்ற மணமகனுக்கு பெண் தேவை. துர்க்கா திருமண சேவை, வளர்மதி இலம், கே.கே. எஸ். வீதி, மல்லாகம். (4427)

### புத்தகம்

1989 ஆம் ஆண்டுக்கான சாகித்திய மண்டலப் பரிசைப் பெறும் நாடக நூல். அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதிய முதலாம் பிள்ளை 80/-. 10 வானொலி நாடகங்கள், ஒரங்க நாடகம் பற்றிய ஒரு கட்டுரை. (18921)

### நீம் தூபம்

இரவில் ஆழ்ந்த உறக்கம், சுகவாழ்வுக்கு உதவுகிறது. உறக்கம் கெடுக்கும் நுளம்பினை விரட்டிட இரவில் நீம் தூபம் புகையுங்கள்; இயற்கைத் தூபம் ஒரு பைக்கெற் விலை ரூபா 3/-; அண்ணா கோப்பிக்கடைகளிலும் கிடைக்கிறது. மில்க்வைத். (சி/0997)

### அச்சு இயந்திரம் உடன் தேவை

பிளேட்டின் (Platin) அச்சு இயந்திரம் உடன் தேவை! விலை விபரத்துடன் தொடர்பு கொள்ளவும். க. முத்துக்குமாரசாமி, 432, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (C/1060)

## முத்திரைக்குத் தட்டுப்பாடு

கொழும்புத்துறை, டிச. 12 யாழ். மாவட்டத்தில் ஒரு ரூபா, இரண்டு ரூபா முத்திரைகள் உட்பட விலை உயர்ந்த முத்திரைகளுக்கும் மற்றும் வான் கடிதங்களுக்கும் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கிலுள்ள பெரும்பாலான தபால் அலுவலகங்களில் முத்திரை இல்லை என்ற அறிவித்தல் பலகை தொங்கவிடப்பட்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. [த-30]

## மன்னாரில் வீடு தீக்கிரை

யாழ்ப்பாணம், டிச. 12 மன்னார், செட்டிகுறிச்சா என்ற இடத்தை படையினர் திங்கட்கிழமை சுற்றி வளைத்து தேடுதல் நடத்தினர்.

திரும்பும் வழியில் அவர்கள் வீடு ஒன்றை தீவைத்துக் கொளுத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ)

---

வலிகாமம் தெற்கு பிரதேச சபை

## கேள்வி அறிவித்தல்

டிராக்டர் (இழுபொறியந்திரமும், பெட்டியும்)

## வாடகைக்கு அமர்த்துதல்

மேற்படி இழுபொறியந்திரமும், பெட்டியும் 01-01-1992 தொடக்கம் 31-12-1992 வரை வாடகைக்கு அமர்த்துவதற்கான கேள்விகள் 24-12-1991 நண்பகல் 12.00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

மேலதிக விவரங்களையும், விண்ணப்பப் படிவங்களையும் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

செல்வி தனுஜா தணிகாசலம்,
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,

வலி-தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம். 10-12-1991 [சி 1105]

---

# நினைவஞ்சலி

6ஆம் வருடம் | 1ஆம் வருடம்





அமரர்
தம்பையா தில்லைநாதன்
பிறப்பு: 20 - 12 - 1905
இறப்பு: 18 - 12 - 1985

திருமதி
பொன்னம்மா தில்லைநாதன்
பிறப்பு: 15 - 11 - 1906
இறப்பு: 23 - 11 - 1990
திதி: 12 - 12 1991

எம்மைப் பிரிந்து விண்ணேறிவிட்ட உங்களை மண்ணில் இருந்து நினைவு கூருகின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

சண்டிலிப்பாய். (4425)

---

கணபதி துணை

## ஆச்சார்யாபிஷேக அழைப்பு

திருவருட் செயலால் நிகழும் பிரசோற்பத்தி வருடம் கார்த்திகை மாதம் (12-12-1991) 26 ஆம் திகதி, இன்று பகல் 11 மணி முதல் 12 மணி 45 நிமிடம் வரையுமுள்ள பூர்வ ஷஷ்டி திதியும், அவிட்ட நட்சத்திரமும், சித்த யோகமும், கூடிய கும்ப லக்கின சுப முகூர்த்தத்தில்,

எமது கனிஷ்ட புத்திரன்

### "ஸ்ரீமத் பாஸ்கர சர்மாவுக்கு"

அராலி மேற்கு லோலை பிட்டி விநாயகர் சந்நிதானத்தில் சிவாச்சார்யாபிஷேகம் செய்ய விநாயகப் பெருமான் திருவருளை முன்னிட்டு நிச்சயித்திருப்பதனால், அத்தருணம் யாவரும் சமூகம் தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

இங்ஙனம்:
சிவஸ்ரீ. ச முத்துக்குமாரசாமி - குருக்களும் - பாரியாரும்.

அராலி மேற்கு,
வட்டுக்கோட்டை. (19032)

---

இடம் பெயர்ந்தவர் நிவாரண நிதிக்காக

### வானம் பாடி

இசைக் குழுவினரின்

## இன்னிசைக் கச்சேரி

இடம்: யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கம்
காலம்: [14-12-91] சனி பிற்பகல் 2.00 மணிக்கு
பிரவேசம்: 10.00 ரூபா

பிரவேசச் சீட்டுக்கள் கிடைக்குமிடம்:
(I) யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக்கழக அலுவலகம்
(II) நுழைவாயில் (4429)

---

## யா / உடுவில் மகளிர் கல்லூரி

### 4, 5, 6, 10, 11, 12ஆம் ஆண்டு அனுமதிக்கான விண்ணப்பமும் பரீட்சையும் - 1992

★ மேற்படி வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களை பாடசாலை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
★ தெரிவுக்கான பரீட்சை 21 - 12 - 1991 இல் நடைபெறும்.
★ முதல் மூன்று இடங்களுக்கும் விசேட சலுகைகள் உண்டு.

விண்ணப்ப முடிவு திகதி: 17 - 12 - 1991

(சி-1102) - அதிபர்.

---

# ஓராண்டு நினைவஞ்சலி



அகலா ஜனனம்: 06 — 04 — 1978
அகால மரணம்: 23 — 11 — 1990

## செல்வன் செல்வராசா சசிக்குமார்

(யாழ். மத்திய கல்லூரி மாணவன்)

திதி:- 12 - 12 - 1991 (வியாழக்கிழமை)

சவிரக்க மற்ற ஹெலி வானில் நின்று
ஏவிவிட்ட குண்டுமழைக்கு எம வாச்சே!
சாவுமணி அடிப்பதற்குத் தூதாய் வந்த
சண்டாளர் அமைதிதனை குலைத்தே விட்டார்
மேவுமருட் சசிக்குமார் நீ எங்கள் செல்வம்
மேதினியை விட்டின்று ஆண்டொன்றாச்சு
நீ விரும்பிப் பூசித்த நர்மெய்யோரும்
நெஞ்சுருகிப் பிரார்த்திப்போம் சாந்திக்காய்.

எம் அன்புச் செல்வத்தை
என்றும் நினைவு கூரும்:

அன்பு அப்பா, அம்மா, சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்,
ஆசிரியர்கள், நண்பர்கள்.

"மாயவன் டிரான்ஸ்போர்ட்"
சங்கானை வீதி, அச்சுவேலி.

தற்காலிக வதிவிடம்:-
வாரைக்கூடல் வைரவர் கோவிலடி.
புத்தூர்.

(19080)

---

# ஓராண்டு நினைவஞ்சலியும் ஆண்டுத் திவசமும்

தாயின் மடியில்:
13 — 03 — 1973

தாயக மண்ணில்:
23 — 11 — 1990



திதி:
12 - 12 - 1991

## கப்டன் "ரசாத்"

(சிவசுப்பிரமணியம் - சுரேஸ்குமார்)

மாங்குளம் இராணுவமுகாம் தகர்ப்பின்போது வீரமரணமடைந்தார்.

மானத் தமிழ் மறவனே
மாண்புமிகு தமிழினத்தை
மாற்றான் அடிமைப்படுத்தலைச் சகியாது
மாணம்மிகு புலிப்படையில் - நீயுமே இணைந்து
மாங்குளம் இராணுவமுகாம் தனை அழித்தொழித்து
மாற்றானை வென்று வெற்றிவாகை தனைச் சூடி
மார்பினிலே குண்டேற்றி - மாவீரனானாயே
மறவோம் உந்தன் மாண்புதனை
மதித்து என்றும் உன்வழி தொடர்வோம்.........

தாயார், உற்றார்,
உறவினர், நண்பர்கள்,

கணேசபுரம்,
கிளிநொச்சி. (18635)

---

## மலிவு விற்பனை

ஆரம்பம்: 1991 - 12 - 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை

இடம்: மடத்தடி, யாழ்ப்பாணம், மாக்கெட் கட்டடம் (பிரதம தபால் நிலைய முன்பு)

நேரம்: காலை 6-30 முதல் 10-30 வரை
மாலை 3-30 முதல் 5-30 வரை

யாழ். மாவட்ட
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
கலாசாலை வீதி,
(சி-1106) திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.

---

# 3 ஆவது ஆண்டு நினைவு தினம்

## அமரர் இம்மானுவேல்

தோற்றம்: 14 - 03 - 1920
மறைவு: 12 - 12 - 1988

அன்பின் கடலாய் இனைபிரியா பத்தாய்
எம்மனைவருடன் சேர்ந்து திடீரென்று
பரமனடி சேர்ந்த உம் ஆன்மா
அன்பரின் இளைப்பாற அல்லும் பகலும்
இறைஞ்சுகின்றோம்.

மனைவி, மக்கள், மருமகன்.

161/1, பிரதான வீதி,
பாஷையூர், யாழ்ப்பாணம். (18939)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## நோக்கங்கள் இரண்டு!

மன்னார் மாவட்டம் பண்டிவிரிச்சானில், ஜி.சீ.ஈ. சாதாரணதர பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருந்த பாடசாலை மீது விமானப்படையினர் குண்டு வீச்சு நடத்தியிருக்கின்றனர்!

தமிழ் மாணவர்களின் கல்வியைப் பாழடித்து, அவர்களின் வாழ்க்கை முன்னேற்றத்தைப் பின்தள்ள வேண்டும் என்பது தெற்கு அரசியல்வாதிகளினதும், அதிகாரிகளினதும் முழுதான உள்ளார்ந்த நோக்கம். அந்த நோக்கத்தின் பிரதிபலிப்பே இந்தக் கொடுமை!

பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி, கடந்த [1990 ஆம்] வருடத்தில், வடக்கு, கிழக்குப் பகுதிகளில் ஜி.சீ.ஈ. சாதாரணதர மற்றும் உயர்தர பரீட்சைகள் நடத்தப்படவில்லை. இந்தத் தாமதத்தினால் தமிழ் மாணவர் கல்வி எவ்வாறு பாதிப்புற்றுள்ளது, அவர்களின் வாழ்க்கை முன்னேற்றம் எவ்வாறு பின்தள்ளப்பட்டுள்ளது என்பதை இப்பத்தியில் ஏற்கனவே பல தடவைகள் விளக்கியுள்ளோம்.

இப்போது ஆரம்பமாகியுள்ள பரீட்சைகூட, எத்தனையோ தயக்கங்கள், பின்னடிப்புகளின் பின்னரே நடைபெறுகிறது. வடக்கில் நிலவும் இந்த நெருக்கடியான சூழ்நிலையிலும் பரீட்சையை நடத்த முடியும், என்று உள்ளூர் அதிகாரிகள் உறுதிபடக் கூறியதாலேயே பரீட்சைத் திணைக்களம் இணக்கம் தெரிவித்ததாக அறிகிறோம். கடைசி வேளை வரை ஏதோ ஒரு காரணத்தைக் கூறிச் சென்ற வருடம்போல காலத்தைக் கடத்தக் காத்திருந்தது அரசு!

பரீட்சை தொடங்குவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர், வலிகாமம் வடக்குப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஜி.சீ.ஈ. சாதாரணதர பரீட்சையைக் குழப்புவதற்காகவே அவ்வாறு தொடங்கப்பட்டதோ என்று எண்ண வேண்டியதாயிற்று.

வினாத்தாள்கள் அரைகுறையாக அனுப்பப்பட்டமை பரீட்சையைக் குழப்புவதற்கான சமிக்ஞையே என்று கூடச் சந்தேகப்பட வைத்தது. உள்ளூர் அதிகாரிகள் எப்படியும் பரீட்சையை நடத்த வேண்டும் என்ற விடாமுயற்சியுடன் அதனைத் தொடங்கினார்கள்.

தமிழ் மாணவர்களைக் கொலைப் பயமுறுத்தல் செய்யும் விதத்தில் படையினர் பரீட்சை மண்டபப் பகுதியில் குண்டு வீச்சு நடத்தியிருக்கிறார்கள். இந்தக் கொலைப் பயமுறுத்தலின் பின்னர் தமிழ் மாணவர்கள் மனோநிலை நிச்சயமாகப் பாதிப்புறும். அவர்கள் பதற்றமுறாமல் மனம் ஒன்றிப் பரீட்சை எழுத முடியாது. சிறந்த - உயர்ந்த - பெறுபேறுகளை ஈட்ட முடியாது.

பரீட்சை எழுதும் மாணவர்களைக் குண்டு வீசிக் கொல்வதற்கு வேறு எந்த நாட்டிலாவது அரசாங்கம் முயன்றதாக - கொடுமை புரிந்ததாக அண்மைக் கால வரலாற்றில் எந்த நிகழ்வும் இல்லை.

எனவே, ஸ்ரீலங்கா அரசாங்கம் பரீட்சை மண்டபம் மீது குண்டு வீசுவது தமிழ் மாணவர் கல்வியைக் கெடுக்கும் நோக்கத்துடன் மட்டுமல்ல, தமிழ் இளைஞர்களை இனப்படுகொலை செய்யும் பெரும் சதித் திட்டத்துடனும் தான்! தமிழர்களைத் தனது பிரசைகள் என்று கூறிக்கொண்டே அவர்களை இனப்படுகொலை செய்யும் படுபாதகத்தையும் புரிகிறது அரசு. கட்டிக்கேட்க எவருமில்லை என்ற இறுமாப்பில்!

## நவீன ஆயுதங்கள் கேட்கிறார் ஜெயலலிதா

சென்னை, டிச. 12

தமிழகக் காவல்துறையினர் பல்வேறு பயங்கரவாத, தீவிரவாத நடவடிக்கைகளை எதிர்கொள்ள வேண்டியிருப்பதால் அவர்களுக்கு நவீன ஆயுதங்களை வழங்க மத்திய அரசு நிதி உதவி அளிக்க வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழகத்தில் இலங்கை தீவிரவாதிகளை ஒடுக்கி காவல்துறையினர் சட்டம், அமைதியை மீண்டும் நிலை நிறுத்தியிருக்கிறார்கள் என்றும் அவர் கூறினார்.

முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று முன்தினம் சென்னையில் அனைத்திந்தியக் காவல்துறையினருக்கான போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பதக்கம் வழங்கி உரையாற்றும் போது இவ்வாறு கூறினார்.

தீவிரவாதிகளாலும், இலங்கை போராளிகளாலும் தமிழகத்தில் இன்னும் உள்ள இக்கட்டுகளை அவர் அங்கு சுட்டிக் காட்டினார். ஆனால் தமிழகக் காவல்துறையினர் அவற்றை சமாளித்து விடுவார்கள் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். (த)

## தொண்டர் ஆசிரியர் 6 ஆயிரம் பேருக்கு நியமனம்

அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதத்தில் ஆறாயிரம் தொண்டர் ஆசிரியர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை கல்விச் சேவைகள் குழு எடுத்து வருகிறது.

நிரந்தர ஆசிரிய நியமனம் கோரி 24 ஆயிரம் தொண்டர் ஆசிரியர்கள் விண்ணப்பித்தனர். இவர்களில் 12 ஆயிரம் பேர் நியமனம் வழங்கப்படுவதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்றும்—

அவர்களில் ஆறாயிரம் பேருக்கு பெப்ரவரி மாதம் நியமனம் வழங்கப்படும் என்றும்—

எஞ்சிய 6,000 பேர் பற்றிய விசாரணைகள் நடைபெற்றுவருவதாகவும் கல்விச் சேவை குழு அறிவித்துள்ளது. (உ-எ)

## அரசாங்க ஊழியருக்கு 5 வருட சம்பள முற்பணம்

கொழும்பு, டிச. 12

அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் அரசாங்க ஊழியர்கள் 5 வருட சம்பள முற்பணத்தை கடனாக பெறலாம் என்று பொது நிர்வாக அமைச்சு வட்டாரங்கள் நேற்று முன்தினம் தெரிவித்தன.

தற்போதிருக்கும் விதி முறையின் படி இரண்டு வருட கால சம்பள முற்பணத்தை அரச ஊழியர்கள் பெற முடியும். ஸ்தாபன விதிக் கோவை அத்தியாயம் 24 இற்கு இணங்க உள்ள அரச ஊழியர்களுக்கு 7 2 சதவீத வட்டியில் இந்தக் கடன் வழங்கப்படும்.

காணி அல்லது காணியும் வீடும் அல்லது வீடொட்டுவதற்கு இந்தச் சம்பள முற்பணம் வழங்கப்படும் என்றும் உத்தியோகபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

5 வருட கால சேவையைப் பூர்த்தி செய்தவர்கள் மட்டுமே இந்தக் கடனைப் பெறலாம். கணவன் மனைவி இருவரும் அரச ஊழியர்கள் என்றால் எவராவது ஒருவர் இந்தக் கடனைப் பெற முடியும்.

பொது நிர்வாக அமைச்சர் வெஸ்டன் பெரேராவின் சிபாரிசை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (த)

## நாட்டை காக்க...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யையும், உள்ளத்திலே விடுதலை உணர்வையும், செயற்பாட்டிலே வீரத்தையும், கரங்களிலே எதிரிக்கெதிரான ஆயுதங்களையும் ஏந்தி எம்மண்ணை மீட்பதற்காகப் புறப்படவேண்டிய நேரம் இது.

எதிரி பொருளாதாரத் தடை, உணவு நெருக்கடி போன்றவற்றை ஏற்படுத்தி எமது மக்களை பட்டினி போட்டு, அடிபணிய வைத்து, நீண்ட ஓர் இன அழிப்பை ஏற்படுத்த முயற்சித்து நிற்கின்றான்.

அவர்கள் ஒன்றை சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். எமது மக்களிடம் அவர்களை விட பன்மடங்கு அதிகமான வீரம், உறுதி, சுதந்திர வேட்கை இருக்கின்றது; எனவே பொறுமையைத் தொடர்ந்தும் கடைப்பிடிக்க மாட்டார்கள்; கிளர்ந்தெழுவார்கள்; எதிரியை விரட்டி, எமது வளமான மண்ணை, பிரதேசத்தைக் காத்து நின்று எமது தாயகப் பூமியை மீட்டெடுப்பார்கள்.

எமது மக்களே! நாம் எங்கேயும் ஓட முடியாது! நாம் காலம் காலமாக வாழ்ந்த இந்தப் பாசமிகு பூமி, காக்கப்பட வேண்டும்; நாம் இங்கே நிம்மதியாகவும், கௌரவமாகவும் வாழவேண்டும். புறப்படுவோம்; வாருங்கள்! போராடியே சுதந்திரத்தைப் பெறுவதற்கும் எதிரியை விரட்டியடிப்பதற்கும் வாருங்கள்! இது தான் நாம் உங்களுக்குக் காட்டு நிற்கும் ... ... ...ரும்;—என் ...

## சீனப் பிரதமருக்கு எதிராக புதுடில்லியில் ஆர்ப்பாட்டம்

புதுடில்லி, டிச. 12

சீன பிரதமர் லீ பெங் நேற்று புதுடில்லி வந்தடைந்தபோது அவருக்கு எதிராக நகரின் பல பகுதிகளிலும் ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றன.

சுமார் 250 திபெத்தியம் வரை இந்த ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டனர்.

நகரின் ஒரு பகுதியில் ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைப்பதற்காக பொலீஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்யவும் நேரிட்டது. இச் சம்பவங்களில் 70 பேர்வரை காயம் அடைந்தனர். 1959 ஆம் ஆண்டில் திபெத்தை தனது ஒரு பிரதேசமாக சீனா இணைத்துக் கொண்டதும் அதனை அடுத்து ஆத்மீகத் தலைவர் தலாய்லாமா தலைமையில் ஆயிரக் கணக்கான திபெத்தியர்கள் இந்தியாவில் அரசியல் தஞ்சம் பெற்றதும் குறிப்பிடத்தக்கவை. (உ-இ)

## பாம்புக் கடிக்கு இளைஞர் பலி

யாழ்ப்பாணம், டிச. 12

திருமணமாகி மூன்று மாதமான இளைஞர் பாம்புக் கடிக்கு இலக்காகி மரணமானார். இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் இரவு மீசாலையில் இடம்பெற்றது.

ஊரெழுவைச் சேர்ந்த கப்பையா ஆனந்த நடராசா [வயது 32] என்பவரே உயிரிழந்தவராவார். இவரின் சடலம் நேற்றுப் பிற்பகல் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது. (உ-15)

## மாணவர்களுக்கான உணவு முத்திரை

யாழ். மாவட்ட மாணவர்களுக்கு டிசெம்பர், ஜனவரி, ஆகஸ்ட் ஆகிய மாதங்களுக்கான மதியபோசன உணவு முத்திரைகளுக்கு, ஹோர்லிக்ஸ், பால்மா, மற்றும் சீனி ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன.

மாணவர்கள் தமக்கென ஒதுக்கப்பட்ட ப.நோ.கூ.ச கிளைகளில் இப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (ந-80)

## எனக்கு குழி தோண்டியவர்கள் தாமே அதில் விழுந்துள்ளனர்

### இப்படி பிரேமா கூறுகிறார்

எனக்கென்று தோண்டிய குழியில் சதிகாரர்கள் தாமே விழுந்துள்ளனர். அவர்களின் பாவத்துக்கு இப்போது நாங்கள் விலைகொடுக்க வேண்டி உள்ளது.

ஜனாதிபதி பிரேமதாசா பொலன்னறுவையில் நடைபெற்ற ஐ.தே.க கூட்டத்தில் பேசும்போது இவ்வாறு கூறினார்.

என்னை வீட்டுக்கு அனுப்பி வைக்க முயன்ற சிலர் இப்போது விதியின் பயனைத் தாங்களே அனுபவிக்கின்றனர் என்றும் அவர் சொன்னார். (த)

## கருணாகரனின் அரங்கிசை

யாழ்ப்பாணம், டிச. 12

பிரபல சங்கீத வித்துவான் திரு ஏ. கே. கருணாகரனின் அரங்கிசை நிகழ்ச்சி நாளை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது.

திரு. கருணாகரன் முன்னர் யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் சிரேஷ்ட போதனாசிரியர்களில் ஒருவராக விளங்கியவர். தற்போது சிங்கப்பூர் இந்திய நுண்கலைக் கழகத்தின் சங்கீத ஆசானாக இருக்கிறார். (அ-5)

## அணு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆயுதக் கட்டுப்பாடற்ற வலயமாக மாறும் அபாயம் ஏற்படும் என்றும் —

துண்டுபட்டு தனித்துப் போகும் குடியரசுகளிடையே நிலவக்கூடிய முறுகல் நிலை எந்நேரமும் அணு ஆயுத யுத்தம் ஒன்று வெடிக்கக்கூடிய அச்ச நிலையை உருவாக்கும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

இதே வேளை —

சோவியத்தில் தற்போது நிலவும் நிலையற்ற தன்மை காரணமாக அங்குள்ள அணு ஆயுதங்கள் மற்றும் முப்படைகளும் யாரின் கட்டுப்பாட்டில் உள்ளன என்பது குறித்து ஒன்றுமே தெரியாத நிலை நிலவுவதாக சுபாதின செய்தி ஏஜென்சிகள் தெரிவித்தன. (உ-எ)

## பிரதான..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விதிக்கப்பட்டுள்ளது.

இம் மருந்துகள் விலை உயர்ந்தவை என்பதாலும் யாழ். ஆஸ்பத்திரிக்கு மிகக் குறைந்த அளவிலேயே அனுப்பப்படுகின்றனவாம்!

ஆனால் இப்போது "செப்ரிசேமியா" நோய்க்கட்டத்தை அடையும் நோயாளரின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்து வருவதாக ஆஸ்பத்திரி வட்டாரங்களில் இருந்து அறியப்படுகிறது.

முந்திய வருடங்களை விட இம்முறை வயிற்றோட்டம், தொடர் காய்ச்சல் ஆகியவற்றால் பீடிக்கப்படுவோர் அதிக எண்ணிக்கையில் "செப்ரிசேமியா" நிலையை அடைகின்றனர். மூன்று வயது முதல் ஆறு வயது வரையான சிறுவர்களே இந்நோய்க்கு அதிகளவில் பலியாகிறார்கள்.

குடாநாட்டு மக்களில் கணிசமான எண்ணிக்கையினர் அகதி முகாம்களில் தங்குவதாலும், சீரான சுகாதார வசதிகள் இல்லாததாலுமே இம்முறை வயிற்றோட்டம், தொடர் காய்ச்சல் ஆகியன வேகமாகத் தொற்றி வருவதாகவும் வைத்திய வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்தன. (அ-6)

## சோவியத்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

என்றும்— சோவியத் பாதுகாப்பு அமைச்சரின் ஆதரவு இவருக்கு இருப்பதாகவும் பி.பி.சி. அறிவித்தது.

இதேவேளை—

சோவியத் ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவும் சோவியத் இராணுவ அதிகாரிகளுடன் உயர் நிலைப் பேச்சு நடத்தினார் என்றும்—

தமது நிலைப்பாட்டை ஆதரிக்கும்படி சோவியத் இராணுவத்தை கோரி அப்போது கேட்டுக்கொண்டார் என்றும் அறிவிக்கப்படுகிறது.

யெல்ட்சினுக்கும் கோர்பச்சேவுக்கும் இடையே தற்போது அதிகாரத்தைக் கைப்பற்றும் போட்டி ஏற்பட்டிருப்பதாகவும்—

சோவியத் இராணுவத்தின் ஆதரவு எவர் பக்கம் இருக்கிறதோ அவரே வெல்லக்கூடிய நிலை ஏற்பட்டிருப்பதாகவும் பி.பி.சி. வானொலி தெரிவித்தது.

சோவியத் இராணுவத்தில் உள்ளவர்களில் பெரும்பாலானோர் யெல்ட்சினின் ரஷ்ய மாநிலக் குடியரசைச் சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அச்சுக் கோப்பாளர் தேவை

அச்சுக் கோப்பாளர் வேலைக்கு ஆட்கள் தேவை. பத்திரிகைத் துறையில் அனுபவமுள்ள ஆண் பாலர் விண்ணப்பங்களுடனும், நற்சான்றிதழ்களுடனும் அலுவலக நேரத்தில் நேரில் சமுகம் தரவும்.

முகாமையாளர் [ஆளணி],
உதயன் வெளியீட்டகம்,

நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

---

## யா/இராமநாதன் கல்லூரி
## சுன்னாகம்

## 1) ஆண்டு 1, ஆண்டு 6க்கான அனுமதி

வயது ஆண்டு 1 — 1-2-1987க்கு முன் பிறந்தவர்.
வயது ஆண்டு 6 — 1-2-1981க்கு முன் பிறந்தவர் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி 23 - 12 - 1991

ஆண்டு 6க்கான பிரவேசப் பரீட்சை 29-12-1991 காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

2) பிரத்தியேக
பாலர் பாடசாலைக்கும்

3) பிரத்தியேக
தையல் வகுப்புக்கும்

விண்ணப்பங்கள் 1 - 1 - 1992 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பப் படிவங்களை கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம்.

—அதிபர்.

இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம். (19039)

---

## மரண அறிவித்தல்கள்

### செல்லப்பா கனகராஜா
(Rtd. Stenographer)

செ. கனகராஜா 11-12-1991 இல் காலமானார். அன்னார் திருமதி கமலாதேவியின் கணவரும், செல்வி சுகுணாலினி, திரு. சுகுமாரன், திருமதி நளாயினி ஆகியோரின் தந்தையும், திருமதி புஷ்பராணி, திரு. உதயகுமார் [ஆண்டாதி, யாழ். போதனா வைத்தியசாலை] ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற திரு. திருமதி செல்லப்பாவின் மகனும் காலஞ்சென்ற திரு. நடராஜா, மற்றும் திரு. கனகசுந்தரம், கமலாம்பிகை, மாணிக்கம் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற திரு. அருணாசலம் மற்றும் திருமதி அருணாசலத்தின் மருமகனும், கமலாம்பிகை, காலஞ்சென்ற திருமதி அம்பிகாதேவி சிவப்பிரகாசம் மற்றும் திருமதி சீதாதேவி தியாகராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 12 - 12 - 1991 காலை 10 மணியளவில் கோம்பையன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

இல. 14
சோமசுந்தரம் வேன்,
கண்டுக்குளி, யாழ்ப்பாணம். (19038)

### சுப்பையா ஆனந்தநடராசா
[ஆனந்தன்]

ஊரெழு மேற்கு ஏ.கே.ஆர். மில் உரிமையாளர் சுப்பையா ஆனந்தநடராசா [ஆனந்தன்] 10-12-91 செவ்வாய்க்கிழமை அகால மரணமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று காலை 9-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பொக்கணை மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஊரெழு மேற்கு, குடும்பத்தினர்
சுன்னாகம். (4430)

---

# அவசரமாகத் தேவைப்படும் மருந்து வகைகளின் பட்டியல்

## தொண்டர் நிறுவனங்களிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம், டிச. 12

யாழ். ஆஸ்பத்திரிக்கு அவசரமாகத் தேவைப்படும் மருந்து வகைகள் அடங்கிய பட்டியல் ஒன்றை யாழ். ஆஸ்பத்திரி நிர்வாகம் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பகத்திடம் கையளித்துள்ளது.

யாழ். ஆஸ்பத்திரியில் அத்தியாவசிய மருந்து வகைகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை அடுத்து யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப் பிரதிநிதிகள் நேற்று யாழ். ஆஸ்பத்திரி நிர்வாகத்தினரை சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

அப்போதே அவசியமாகத் தேவைப்படும் பொருட்களின் பட்டியல் அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

பட்டியலின் பிரதிகள் அரச சார்பற்ற நிறுவனங்களின் கொழும்பு தலைமையகங்களுக்கும் மற்றும் யாழ். அரச அதிபருக்கும் அனுப்பி வைக்கப்படும் என இணையகத்தின் செயலாளர் தெரிவித்தார். (இ-5)

---

## நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிச. 12

திருவெம்பாவை உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை — மார்கழி மாதம் முதலாம் திகதி — ஆரம்பமாகிறது.

குடாநாட்டில் உள்ள அனேகமான ஆலயங்களில் நாளை தொடக்கம் பத்து தினங்களுக்கு திருவெம்பாவை விசேட பூசைகள் நடைபெறும்.

---

### வலிகாமம் தெற்கு பிரதேச சபை
### கூறுவிலை அறிவித்தல்
## வாகன இலக்கத் தகடுகள் - 1992

1992 ஆம் ஆண்டுக்குரிய வாகன இலக்கத் தகடுகளை விநியோகிப்பதற்கான கூறுவிலைகள் எதிர்வரும் 24-12-1991 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

உரிய கூறுவிலைப் படிவங்களையும், மேலதிக விவரங்களையும் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

செல்வி தனுஜா தணிகாசலம்,
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை.

வலி-தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம். 10-12-1991. (இ/1104)

---

## திருமலை..
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒப்புக்கொண்டனர்.

கைப்பற்றப்பட்ட ராணுவத் தளபாடங்களின் விவரம் வருமாறு:-

★ ரி 81 ரக துப்பாக்கி - 1
★ ரி 56-1 ரகத் துப்பாக்கி - 1
★ ரி 56 பட் மொடல் துப்பாக்கி - 2
★ ரி 81 ரவைக்கூடு - 5
★ ரி 56 ரவைக்கூடு - 18
★ ஐ. எம். ரவைகள் - 1,174
★ ஜே. ஐ. ஆர். ரக கிரனேட் - 4
★ ரி. என். ரி. கிரனேட் - 1
★ ஏ. கே. ஹோல்ஸர் - 6
★ ஹெல்மெட் - 2
★ தொப்பி 3
★ ராணுவ பெல்ட் - 8
★ றெயின் கோட் - 3
★ கிற் பாக் - 4
★ சப்பாத்து - 3 சோடி

(ஒ-எ-5)

## தெற்கிலிருந்து..
[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

குழுவில் மொத்தம் நான்கு பேர் அங்கம் வகிப்பர்.

இக்குழுவினரின் வடபகுதி விஜயம் முன்னர் பல தடவைகள் ஏற்பாடு செய்யப்பட்டு, பின்னர் கடைசி நேரங்களில் பின்போடப்பட்டு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கு - கிழக்கு நெருக்கடிக்கு சமாதானத் தீர்வு காணும் நோக்கத்துடன் கொழும்பில் சமீபத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள சமாதானக் குழுவில் வண. பிதா சோமா பெரேராவும் அங்கம் வகிக்கிறார். மெதடிஸ்த மகா சபையின் தற்போதைய தலைவர் கலாநிதி விஸ்லி முத்தையா மற்றும் அரசியல் சார்பற்ற தென்னிலங்கைப் பிரமுகர்கள் சிலரும் பிரஸ்தாப சமாதானக் குழுவின் ஏனைய அங்கத்தவர்கள் ஆவர்.

இச் சமாதானக் குழு ஏற்கனவே அமைச்சர் ஜனாப். ஏ. ஸி. எஸ். ஹமீத் உட்பட பல அரச தரப்பு அரசியல்வாதிகளையும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவையும் சந்தித்துப் பேசியுள்ளது.

நாளை யாழ்ப்பாணம் வந்து சேரவுள்ள தூதுக் குழுவினர் வட பகுதியில் இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடுவர். அத்தோடு விடுதலைப் புலிகள் தலைவர்களை அவர்கள் சந்திக்கவும் ஏற்பாடாகி இருக்கிறது.

இக்குழுவினருடன் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான தேசிய திருச் [illegible]

---

## மரண அறிவித்தல்கள்

### இளையதம்பி ஐயம்பிள்ளை
(இளைப்பாறிய ஆசிரியர்)

அரசடி சங்கத்தானையை வதிப்பிடமாகக் கொண்ட இ. ஐயம்பிள்ளை 13 - 11 - 1991 அன்று டென்மார்க்கில் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16 - 11 - 1991இல் டென்மார்க்கில் நடைபெற்றன. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நா. பரமநாதன்,
(மைத்துனர்).

ஸ்ரேசன் றோட்,
சாவகச்சேரி. (19036)

### அருட் சகோதரர் கலிஸ்ரஸ் C. R.

தோலகட்டி செபமாலைத்தாசர் சபையைச் சேர்ந்த அருட் சகோதரர் கலிஸ்ரஸ் C. R. காலமானார்.

இறுதிச் சடங்குகள் யாழ். அருள் ஆச்சிரமத்தில் (12-12-1991) இன்று வியாழன் காலை 9 மணிக்கு கூட்டுத் திருப்பலியுடன் நடைபெறும். தொடர்ந்து யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
செபமாலைத்தாசர் சபை

(19035)

### சுப்பிரமணியம் அம்பலவாணர்
[முன்னாள் அதிபர், ஏழாலை மகாவித்தியாலயம்]

ஏழாலை மேற்கு, சுப்பிரமணியம் அம்பலவாணர் [முன்னாள் அதிபர், ஏழாலை ம. வி.; முன்னாள் தலைவர் — சுன்னாகம், தெல்லிப்பளை ப. நோ. கூ. ச.; வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம்] நேற்று [11-12-91] காலமானார்.

அன்னார் பார்வதிப்பிள்ளையின் கணவரும், உமாசங்கர் (சட்டத்தரணி), மணிமேகலை ஆகியோரின் தந்தையும், பத்மரஞ்சினி உமாசங்கர் யாழ். பல்கலைக்கழகம்], வி. இலங்கேஸ்வரராஜலிங்கம் [பொறியியலாளர்] ஆகியோரின் மாமனாரும், சைலஜா, சிவானுஜா, வைஷ்ணவி, சௌந்தர்யா, சௌமியன் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற மங்கையர்க்கரசி, காலஞ்சென்ற நடராஜா, குமாரசாமி, பொன்னுத்துரை, பொன்னம்மா, நாகம்மா ஆகியோரின் சகோதரனும், பூரணச்சந்திரன் [முன்னாள் ஆசிரியர், உரும்பராய் இந்துக்கல்லூரி], முருகையா [முன்னாள் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், உடுவில் உதவி அரசாங்க அதிபர் அலுவலகம்], காலஞ்சென்ற சிவப்பிரகாசம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அந்திமக்கிரியைகள் ஏழாலை மேற்கிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று வியாழக்கிழமை (12-12-91) மு. ப. 11.00 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
அ. உமாசங்கர்
[மகன்]

ஏழாலை மேற்கு,
சுன்னாகம். (19042)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட் டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 3??/? இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 12 - 12 - 1991 அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org